

# கையால் மலம் அள்ளும் தொழிலுக்கு
# தடை மற்றும் மறுவாழ்வு
# சட்டம் - 2013





தனியார் மற்றும் உள்ளாட்சி உள்ளிட்ட அனைத்து அரசு அமைப்புகளும் சுகாதார கேடு விளைவிக்கும் கழிவறைகளை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

**எந்த சூழலிலும்  பாதுகாப்பு உபகரணங்கள் இன்றி மனித கழிவுகளை அகற்ற மனிதர்களை பணி அமர்த்துவது குற்றம்.**





## சுகாதார கேடு விளைவிக்கும் கழிவறைகளை பயன்படுத்த தடை

### மீறினால்

- ஒரு வருட சிறை தண்டனை
- அல்லது ரூ.50,000 அபராதம்
- அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும்

### இரண்டாவது முறை மீறினால்

- இரண்டு வருட சிறை தண்டனை
- அல்லது ரூ.1,00,000 அபராதம்
- அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும்






## மனித கழிவு கிடங்குகளை / பாதாள சாக்கடைகளை பாதுகாப்பு கருவிகள் இன்றி துப்புரவு செய்ய மனிதர்களை ஈடுபடுத்துவது குற்றம்

### மீறினால்

- இரண்டு வருட சிறை தண்டனை
- அல்லது ரூ.2,00,000 அபராதம்
- அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும்

### இரண்டாவது முறை மீறினால்

- 5 வருட சிறை தண்டனை
- அல்லது ரூ.5,00,000 அபராதம்
- அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும்






**எந்தவொரு தனிநபரும், அதிகாரம் பெற்ற உள்ளாட்சி நிர்வாகமும், ஏனைய அமைப்புகளும் , அரசு நிறுவனங்களும் இந்த சட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்து நேரிடையாகவோ, மறைமுகமாகவோ மனித கழிவுகளை அகற்றும் பணிகளில் எவர்  ஒருவரையும் பாதுகாப்பு கருவிகள் இன்றி பணி அமர்த்துதல் கூடாது**

### தொழிலாளர்களை மாண்புடன் நடத்த வேண்டும்



- ✓ அவமதிப்பது குற்றம்
- ✓ நியாயமான ஊதியத்தை உறுதி செய்தல்
- ✓ சாதிய ரீதியான பாதுபாடு வன்கொடுமை குற்றம்
- ✓ பணிபாதுகாப்பு
- ✓ அரசாணைகளை நடைமுறைப்படுத்துதல்

### பணியின்போது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்




### சட்டத்தை மீறினால் கடுமையான தண்டனை!



**மீறுபவர் யாராக இருந்தாலும் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்**

**மலம் அள்ளும் தொழில் இழிதொழில் !**
**இதை ஒழிப்பதே நமது லட்சியம் !!**

**கையால் மலம் அள்ளுதல் முற்றிலும் தடை**

தொலைபேசி உதவி எண்:
**1800-11-3863**
மாண்புடன் வாழ்வோம்!
மாற்றத்தை ஏற்படுத்துவோம்!



# மலம் அள்ளும் தொழில்
## சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது




மலம் அள்ளும் தொழிலுக்கு தடை மற்றும் மறுவாழ்வு சட்டம், 2013

## 2 மலம் அள்ளும் தொழிலாளி யார்?

**கீழ்கண்ட பணிகளை கைகளால் அல்லது பாரம்பரிய கருவிகளை வைத்து செய்வோர்:**

- ✔ சுகாதாரமற்ற கழிவறைகளில் **மனித கழிவுகளை அகற்றுதல்**




- ✔ சாக்கடை / கழிவுநீர் **கால்வாய் சுத்தம் செய்தல்**




- ✔ செப்டிக் டேங்க் **சுத்தம் செய்தல்**




- ✔ செத்த விலங்குகளின் **கழிவுகளை அகற்றுதல்**




- ✔ தெருவோரத்தில் உள்ள **மலத்தை அகற்றுவோர்**




- ✔ மனித கழிவுகளை கைகளால் **அகற்றுதல்**




- ✔ பாதாள சாக்கடையில் **இறங்கி அள்ளுதல்**




➡ **இத்தகைய பணிகளில் ஏதாவது ஒன்றை செய்வோர்**

## "மலம் அள்ளும் தொழிலாளி" ஆவார்




**மேலே சொல்லப்பட்டவாறு நீங்கள் மலம் அள்ளும் தொழிலாளியாக இருந்தால் உடனடியாக**

**சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரிடம்**

**பதிவு செய்ய வேண்டும்**




உதவி & தகவலுக்கு:
தேசிய தொலைபேசி உதவி எண்:
**14420**

இணையதளம்:
**www.ncsk.nic.in**

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்

**இவண் : மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக்குழு**

சமத்துவம்! மரியாதை! மறுவாழ்வு!



# மலம் அள்ளும் தொழிலாளியாக பதிவு செய்வது எப்படி?




**மலம் அள்ளும் தொழில் முற்றிலும் தடை!**


**1** அருகிலுள்ள உள்ளாட்சி
(மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி)
அலுவலகத்தில் உரிய படிவத்தில்
விண்ணப்பிக்கவும்





**2** தங்களை
"மலம் அள்ளும் தொழிலாளி"
என பதிவு செய்யவும்



**3** தேவையான ஆதாரங்களையும்
ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும்




**4** அரசு அதிகாரிகள்
சரிபார்ப்பு நடத்துவர்



**5** பதிவு செய்யப்பட்ட பின்
விசாரணையின் முடிவில்
அடையாள அடைடை வழங்கப்படும்





**6** அடையாள அட்டை
பெற்றவருக்கு
மறுவாழ்வு திட்டங்களை
அரசு வழங்கும்



## தேவையான ஆவணங்கள்:


- ✔ ஆதார் அட்டை




- ✔ முகவரி சான்று



- ✔ வங்கி கணக்கு விவரம்




- ✔ புகைப்படம்



## அடையாள அட்டை பெற்றவருக்கு அரசு வழங்கும் நலத்திட்டங்கள்



தொழில் பயிற்சி




நிதி உதவி



வசதி (வீடு)



கல்வி உதவி



சுகாதார காப்பீடு



வேலை வாய்ப்பு உதவி



**மலம் அள்ளுவது அவமானம்!**
**மனித மாண்பை சிதைக்கும்!!**



மேலும் தகவலுக்கு:
உள்ளாட்சி அலுவலகத்தை
தொடர்பு கொள்ளவும்





# மலம் அள்ளும் தொழில்
# சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது




## மலம் அள்ளும் தொழிலாளர்களுக்கான
# மறுவாழ்வு திட்டங்கள்



- மாற்று வேலை




- ரூ.40,000 நிதி உதவி ஒரே தவணையில்



- 44 பாதுகாப்பு கருவிகளைக் கொண்டு பணி செய்வதை உறுதி செய்தல்



- மத்திய மாநில அரசு மூலம் விடுகட்ட. 3 செண்ட் இடம் வழங்கப்படும்



- மத்திய மாநில அரசு திட்டத்தின் மூலம் விடுகட்ட, நிதி வழங்குதல்




- குழந்தைகளுக்கு கல்வி உதவி



- குழந்தைகளின் திறன்களை வளர்க்க மாதம் ரூ.3000 ஊக்கத்தொகையுடன் கூடிய பயிற்சி



- மாற்றுத்தொழில் தொடங்க அரசு கடன் திட்டத்தில் முன்னுரிமை




## அதிகாரிகளின் கடமைகளும் பொறுப்புகளும்

- மலம் அள்ளும் தொழில் நடைபெறுகிறதா என்று அறிய அவ்வப்போது ஆய்வு நடத்துதல்
- மலம் அள்ளும் தொழில் நடைபெறும் இடங்களை அடையாளப்படுத்தி உடனடியாக தடுத்தல்
- பாதிக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்தி, அவர்களை பதிவு செய்து, மறுவாழ்வு பெறுவதை உறுதி செய்தல்
- மறுவாழ்வு திட்டங்கள் சரியாக செயல்படுத்துவதை கண்காணித்து உறுதிபடுத்துதல்
- பாதுகாப்பு கருவிகள் மற்றும் மாற்று வேலை கிடைப்பதை உறுதி செய்தல்
- பொதுமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

## விழிக்கண்குழுவின் செயல்பாடுகள்

- மலம் அள்ளும் தொழிலை தடுக்க மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- மலம் அள்ளும் தொழிலாளர்களை கண்டறிந்து அவர்களுக்கு உதவுதல்
- அரசு திட்டங்கள் மற்றும் மறுவாழ்வு திட்டங்கள் குறித்து தொழிலாளர்களுக்கு தகவல் வழங்குதல்
- மறுவாழ்வு திட்டங்கள் சரியாக சென்றடைகிறதா? என்று கண்காணித்தல்
- இந்த இழிதொழிலை ஒழிக்க மாவட்டம் முழுவதும் கண்காணிப்பு செய்து நடவடிக்கை எடுத்தல்
- விழிக்கண்குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

## தேவையான ஆவணங்கள்:



- ஆதார் அட்டை
- முகவரி சான்று



- வங்கி கணக்கு விவரம்
- புகைப்படம்

**இவண்**

## மதுரை சட்ட விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக்குழு




தொடர்புக்கு : 81244 88726, 95852 07624, 97917 84955, 99448 06492
63691 07662, 89401 81040,93611 76994, 77080 13945